DEPOSITION OF WITNESSES

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.1 SRIVAIKUNDAM

| | |
|---|---|
| Case No | STC. 80/2017 |
| Depostition of witness for | Prosecution wit. PW. 10 |
| Name | **திரு. அப்துல் அலி** |
| Father Name | |
| Village | |
| Taluk | |
| caste | |
| calling | |
| Religion | |
| Age | |

**(எதிரி ஆஜர்.)**

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 the 21.10.2024

**முதல்விசாரணை**

1. நான் ஆறாம்பண்ணையில் குடியிருக்கிறேன். ஆஜர் எதிரியை தென்படவில்லை.

கடந்த 2016ம் வருடம் நான் ஸ்ரீவைகுண்டம் வந்து கொண்டிருந்த போது தெற்கு தோழப்பண்ணை அருகே நான் வந்த அரசுபேருந்து 16B ஆனது பனைமரத்தின் மீது மோதியது. எனக்கு முகம் மற்றும் கை, ஆகிய இடங்களில் காயம் ஏற்பட்டது. நான் பஸ்ஸிற்குள் மாட்டிக் கொண்டேன். அங்கிருந்தவர்கள் என்னை மீட்டு வெளியே கொண்டுவந்தார்கள். ஸ்ரீவைகுண்டம் மருத்துவமனையில் சிகிட்சைக்கு சேர்த்தார்கள். பின்பு திருநெல்வேலி அரசுமருத்துவமனை அனுப்பிவைத்தார்கள். நான் அங்கு மூன்று நாட்கள் சிகிட்சையில இருந்தேன். பேருந்து பனைமரத்து மீது மோதியதால் எனக்கு காயம் ஏற்பட்டது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிதரப்பில் குறுக்கு விசாரணை**

**2.** பஸ்ஸில் அன்றையதினம் 80 நபர்கள் இருந்திருப்பார்களா என்றால் 60 நபர்கள் இருந்திருப்பார்கள். சம்பவஇடத்தில் உள்ள பாதையானது குறுகலான பாதை என்றால் சரிதான். சம்பவகாலமானது அக்டோபர் மாதம்

என்பதால் பொதுவாக மழைக்காலம் என்றால் ஆமாம். மழைநேரத்தில் மண் தொய்வான பகுதியில் பேருந்தின் சக்கரம் சென்றால் பேருந்து சாய்ந்துவிடும் என்றால் ஆமாம். அன்றையதினமும் கட்டுப்பாட்டை இழந்துதான் பேருந்து மோதிவிட்டது என்றால் ஆமாம். அன்றையதினம் எனது ஊர்க்காரர்கள் வேறு யாருக்காவது காயம் ஏற்பட்டதா என்றால் இல்லை. சம்பவத்திற்கு பின்பு போலிசார் என்னை எப்போது விசாரித்தார்கள் என்றால் வீட்டிற்கு வந்து விசாரித்தார்கள் . 25 நாட்கள் கழித்து விசாரித்தார்கள். போலிசார் விசாரணையின் போதும் தற்போது கூறிய விவரங்களைதான் சொன்னேன் என்றால் ஆமாம்.

சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில்சாட்சி சொல்ல, சொல்ல என்னால் தட்டச்சருக்குசொல்லப்பட்டு, அவரால் கனிணியில் பதிவு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு ஒப்புக்கொண்டு கையெழுத்து பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண். 1
ஸ்ரீவைகுண்டம்.

DEPOSITION OF WITNESSES

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.1 SRIVAIKUNDAM

| | |
|---|---|
| Case No | STC. 80/2013 |
| Depostition of witness for | Prosecution wit. PW. 11 |
| Name | திருமதி. அனிஸ்பாத்திமா |
| Father Name | |
| Village | |
| Taluk | |
| caste | |
| calling | |
| Religion | |
| Age | |

**(எதிரி ஆஜர்.)**

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 the 21.10.2024

**முதல்விசாரணை**

1. நான் ஆறாம்பண்ணையில் குடியிருக்கிறேன். ஆஜர் எதிரியை தெரியாது.

கடந்த 2016ம் வருடம் நான் ஸ்ரீவைகுண்டம் வந்து கொண்டிருந்த போது தெற்கு தோழப்பண்ணை ஏற்றம் அருகே வந்த போது ஒரு பைக் எதிரே வந்ததால் நான் வந்த அரசுபேருந்து 16B ஆனது பனைமரத்தின் மீது மோதியது. பனைமரத்தில் மோதாவிட்டால் பஸ் உள்ளே விழுந்திருக்கும். எனக்கு இரண்டு கால்முட்டியிலும், முதுகிலும் காயம் ஏற்பட்டது. நான் பஸ்ஸிற்குள் மாட்டிக் கொண்டேன். அங்கிருந்தவர்கள் என்னை மீட்டு வெளியே கொண்டுவந்தார்கள். ஸ்ரீவைகுண்டம் மருத்துவமனையில் சிகிட்சைக்கு சேர்த்தார்கள். பின்பு திருநெல்வேலி அரசுமருத்துவமனை அனுப்பிவைத்தார்கள். நான் அங்கு மூன்று நாட்கள் சிகிட்சையில இருந்தேன். அதன்பின்பு செல்வசுரியா மருத்துவமனையில் சிகிட்சை எடுத்துகொண்டேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிதரப்பில் குறுக்கு விசாரணை**

2. எதிரே பைக் ஓட்டிவந்த நபர் வேகமாக வந்தார் என்றால் எனக்கு தெரியாது. இந்த விபத்து எப்படி நடந்தது என்று எனக்கு தெரியாது

என்றால் சரிதான். நான் அந்த பேருந்தில் வந்ததற்கு ஆதாரமாக பயணச்சீட்டை போலிசாரிடம் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். எனக்கு எந்தவித காயமும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல.

சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில்சாட்சி சொல்ல, சொல்ல என்னால் தட்டச்சருக்குசொல்லப்பட்டு, அவரால் கனிணியில் பதிவு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு ஒப்புக்கொண்டு கையெழுத்து பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண். 1
ஸ்ரீவைகுண்டம்.